சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 26.05.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 107/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-8 |
| சாட்சியின் பெயர் | : | துரைசாமி |
| தந்தை பெயர் | : | சிங்காரு |
| கிராமம் | : | பேட்டை பாலூர் |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| மாவட்டம் | : | திருவாரூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 82 |

2026 ம் ஆண்டு மே மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

3 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.

**<u>முதல் விசாரணை</u>**

எனக்கு முன்னர் சாட்சியம்அளித்து சென்ற அ.சா7 ரவிச்சந்திரன் என்பவரை எனக்கு தெரியும். அவர் டைலர் கடை வைத்து நடத்தி வருகிறார். சம்பவத்தின் போது பேரளத்தில் கடை வைத்திருந்தார். தற்போது குருங்குளத்தில் உள்ள தனது வீட்டில் வைத்து நடத்தி வருகிறார். இந்த வழக்கில் இறந்து போன நாவலன் என்பவரை எனக்கு தெரியும். அ.சா-7 ரவிச்சந்திரன் டைலர் கடையில் எனது துணியை தைக்க கொடுத்திருந்தேன். கடந்த 19.01.2011 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு கடையில் வைத்து அவரை நான் பார்த்தேன். அங்கு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து பின்னர் 12.00 மணி வாக்கில் சட்டையை வாங்கிக்கொண்டு எனது ஊரான பேட்டை பாலூருக்கு வந்துவிட்டேன். நான் விவசாய சங்கத்தில் இருந்தேன். அப்போது பேரளத்தை சேர்ந்த நாவலன் என்பவர் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தார். அவரை எனக்கு தெரியும். அன்றைய தினம் அவரை யாரோ வெட்டிவிட்டதாக நான் பேரளத்தில் இருக்கும் போது கேள்விப்பட்டேன்.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**<u>அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி</u>**

போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் பேரளம் காவல் நிலையத்திற்கு ஒரு மாதம் கழித்து காவல் நிலையத்திற்கு சென்றேன். நான் சொன்னதை எழுதிக்கொண்டார்கள். போலீசார்

என்னை விசாரித்தபோது சட்டையை வாங்குவதற்காக 19.01.2011 ஆம் தேதி ஊரிலிருந்து சைக்கிளில் பேரளம் வரும் போது அ.சா-7 ரவிச்சந்திரன் பூங்காவூர் டீ கடையில் நின்று கொண்டிருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் டைலரை பார்த்து சட்டையை தைத்தாச்சா ஏன் நிற்கிறீர்கள் என்று கேட்டேன் என்றும் சட்டை கடையில் உள்ளது என்றும், அப்போது கடைக்கு போய் எடுத்து தருகிறேன். நீங்களும் வாங்க என்றார் என்றும், அப்போது மாலை 7.00 இருக்கும் கீழ மாங்குடி போவதற்கு முன்பாக ரோட்டின் ஓரம் நாங்கள் போகும் போது தண்டந்தோப்பை சேர்ந்த கோவிந்தன் மகன் ஸ்டாலின் மற்றும் சுகுமாரன் மகன் செல்வம் அங்கு நின்று கொண்டிருந்தாரகள் என்றும், அப்போது அ.சா-7 ரவிச்சந்திரன் என்னங்கடே இங்கு நிர்கிறீர்கள் என்று கேட்டார் என்றும், நாங்கள் ஒரு வேலையாக வந்திருக்கிறோம், நீங்கள் உங்கள் வேலையை பார்த்துட்டு போங்கள் என்று சொன்னார்கள் என்றும், அதனால் நாங்கள் பேரளம் போய்விட்டோம் என்றும், பேரளத்தில் இருக்கும் போது தான் நாவலனை வெட்டி கொன்றுவிட்டார்கள் என்று செய்து தெரிந்தது என்றும், தண்டந்தோப்பை சேர்ந்த 8 ம் எதிரி ஸ்டாலின் மற்றும் 9 ம் எதிரி செல்வம் இருவரையும் எனக்கு தெரியும் என்றும், மேலும் சம்பவம் நடந்தபோது 8 மற்றும் 9 எதிரிகள் அங்கு இருந்ததால் அவர்கள் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என்று நினைத்து கொண்டு அதன் பேரில் தான் காவல் நிலையம் வந்து மேற்படி சம்பவம் தொடர்பாக சொல்லியுள்ளதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** - இல்லை-

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.05.26 15:38:28 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.